1987 ஏப்ரல் 28]

உதகை மண்டல மறுவாழ்வு மையம்.

527—(*வினா எண். 11514) திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் மண்டல மறுவாழ்வு மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள மண்டல மறுவாழ்வு மையம் உதகையில் உள்ள உடல் ஊனமுற்றவர்களின் நலன்களையும் கவனித்து வருவதால் தனியாக உதகையில் மண்டல மறுவாழ்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். அண்ணாதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டல மறுவாழ்வு மையம் எந்த எந்த ஊரில் செயல்படுகிறது? செயல்படுகிற இந்த மையங்கள் எந்த எந்த மாவட்டங்களில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வதேச ஊனமுற்றோர் ஆண்டான 1981-ல் தமிழக அரசு ஐந்து மண்டல மறுவாழ்வு மையங்களை நம்முடைய மாநிலத்தில் அமைத்து இருக்கிறது. இந்த ஐந்து மண்டல மறுவாழ்வு மையங்கள் சென்னை, வேலூர், தஞ்சாவூர், கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் இருக்கின்ற அந்த மண்டல மறுவாழ்வு மையம் சென்னையையும், செங்கற்பட்டு மாவட்டத்தையும் கண்காணிக்கிறது. வேலூரில் இருக்கின்ற அந்த மண்டல மறுவாழ்வு மையம் வட ஆற்காடு, தர்மபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கிறது. தஞ்சாவூரில் உள்ள அந்த மண்டல மறுவாழ்வு மையம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும். கோவையில் இருக்கின்ற அந்த மண்டல

மறுவாழ்வு மையம் கோவை, பெரியார், நீலகிரி, சேலம் ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும். மதுரையில் உள்ள அந்த மண்டல மறுவாழ்வு மையம் மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், அண்ணா, நெல்லை கட்டபொம்மன் சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை கண்காணிக்கும்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்டல மறுவாழ்வு மையங்கள் எந்த எந்த வகையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்கின்றன. உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்வதில் இந்தியாவிலேயே எந்த மாநிலம் முன்னேறி உள்ளது என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மண்டல மறுவாழ்வு மையத்திலும் இரண்டு இளநிலை மறுவாழ்வு அலுவலர்கள், ஒரு மண்டல மறுவாழ்வு அலுவலர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் அனைவரும் அந்த அந்த மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து அங்குள்ள உடல் ஊனமுற்றவர்களின் குறைகளை கேட்டறிந்து அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள், பயிற்சி, வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்புக்கான கடன் ஆகியவைகளில் அவர்களுக்கு உதவி செய்கிறார்கள். சென்ற ஆண்டு நம்முடைய இந்திய பேரரசின் உடல் ஊனமுற்றவர்களுக்கு பணியாற்றுவதில் 17 சிறப்பு பரிசுகள் பெற்று தமிழகம் தான் முதல் இடத்தைப் பெற்று இருக்கிறது.

பனைத் தொழில் வளர்ச்சி ஆய்வுக் குழு.

528—(*வினா எண். 13183) திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைத்தொழில் வளர்ச்சி குறித்து ஆராய அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்துள்ளதா ?